## திருச்செந்தூர் முருகன் கோவில் யானை தாக்கி

# உயிரிழந்த இருவர் குடும்பங்களுக்கு தலா ரூ. 2 லட்சம் நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, நவ. 24 -**

**தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் முருகன் கோவில் யானை தாக்கி உயிரிழந்த இருவர் குடும்பங்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் மற்றும் நிதியுதவி அறிவித்துள்ளார்.**

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர். அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் உள்ள தெய்வானை என்ற யானையின் பாகன் உதயகுமார் மற்றும் அவருடன் அவரது உறவினர் சிசுபாலன் ஆகியோர் 18.11.2024 அன்று யானையின் அருகில் இருந்தபோது யானை திடீரென திமிறி, அருகில் இருந்த பாகன் உதயகுமார் மற்றும் சிசுபாலன் ஆகிய இருவரையும் தூக்கி வீசித் தாக்கியுள்ளது.

இதில், சிசுபாலன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்து விட்டார். பாகன் உதயகுமார் சிகிச்சை பலனின்றி மருத்துவனையில் உயிரிழந்தார் என்ற செய்தியறிந்து மிகவும் வேதனை யடைந்தேன்.

இச்சம்பவத்தில் உயிரிழந்த உதயகுமார் மற்றும் சிசுபாலன் ஆகிய இருவரின் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு இலட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

## இடைத்தேர்தலில் எனக்கு மாபெரும் வெற்றியை வழங்கிய

# வயநாடு மக்களுக்கு எனது நன்றி!

## பிரியங்கா காந்தி வலைதளப் பதிவு!

**புதுடெல்லி, நவ.24-**

**வயநாடு எம்.பி. ஆனார் பிரியங்கா காந்தி. வயநாடு தொகுதி மக்களவை இடைத்தேர்தலில் பிரயங்கா காந்தி, 4 லட்சத்து 10,000 வாக்குகள் வித்தியா சத்தில் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளார்.**

தமது வெற்றியை அடுத்து, நன்றி தெரிவித்து பிரியங்கா காந்தி வெளியிட்ட பதிவில்,



வயநாடு மக்களுக்கு என் நன்றி. நாடாளுமன்றத்தில் உங்கள் குரலாக இருக்க ஆவலுடன் காத்திருக்கிறேன்:

இந்த மரியாதையை எனக்கு வழங்கியதற்கும் - மேலும் நீங்கள் எனக்கு அளித்த அபரிமிதமான அன்புக்கும் எனது நன்றிகள்!

என் சகோதரர் ராகுல், அனைவரையும் விட துணிச்சலானவர்... எனக்கு வழி காட்டியதற்கும், எப்போதும் என் பின்னால் இருப்பதற்கும் சகோதரர் ராகுலுக்கு நன்றி!" என்று குறிப்பிட்டுள்ளார்.

## கழக ஆட்சியின் திட்டங்களுக்கு கலைஞர் பெயர் வைக்காமல்,

# கரப்பான் பூச்சியின் பெயரையா வைக்க முடியும்?

## திருச்சி மாவட்டம் – துறையூரில் – முத்தமிழறிஞர் கலைஞர் சிலை திறப்பு விழாவில்

## எடப்பாடிக்கு – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சூடு!

**துறையூர், நவ.24-**

**திருச்சி வடக்கு மாவட்டம், துறையூரில், நேற்று - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பல்வேறு கழக நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். துறையூர் பேருந்து நிலையம் அருகில், முத்தமிழறிஞர் கலைஞர் சிலையைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றுகையில், "கழக ஆட்சியின் திட்டங்களுக்கு கலைஞர் பெயர் வைக்காமல், கரப்பான் பூச்சியின் பெயரையா வைக்க முடியும்?" என்று எடப்பாடிக்கு காட்டமாக கேள்வி எழுப்பினார்.**



முன்னதாக, துறையூர் நகர் முழுவதும் அவருக்கு வழிநெடுகிலும் சாலைகள் வீதிகள் எங்கும் பெரும் திரளாக திரண்டிருந்த கழக முன்னணியினர், கழக இளைஞர் அணியினர், தொ.மு.ச. தோழர்கள் மற்றும் ஏராளமான பொது மக்கள் அன்போடும், உற்சாகத்தோடும் வரவேற்பு அளித்தனர். துறையூர் மருத்துவமனை சாலை, 'ரத்னா காம்ப்ளக்ஸில்' கலைஞர் நூலகத்தைத் திறந்து வைத்தார்.

இதைத் தொடர்ந்து, துறையூர் பேருந்து நிலையம் அருகில், முத்தமிழறிஞர் கலைஞர் சிலையைத் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

அப்போது துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது :-

திருச்சி விமான நிலையத்திலிருந்து இறங்கி, துறையூருக்கு வருவதற்கு 52 கிலோமீட்டர் அதாவது ஒரு மணி நேரத்தில் வந்திருக்க வேண்டும். கிட்டத்தட்ட 3 மணி நேரம் ஆகியிருக்கிறதென்றால், அந்த அளவிற்கு வழி நெடுக நம்முடைய கழகத்தினரும், அனைத்து அணிகளைச் சேர்ந்தவர்களும், குறிப்பாக, பொது மக்களும் திரண்டு நின்று வரவேற்று, வாழ்த்தி என்னை இங்கு வழியனுப்பி வைத்திருக்கிறார்கள்.

இந்தத் துறையூர் தொகுதிக்குப் பல முறை வந்து இருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினராக, இளைஞர் அணிச் செயலாளராக, விளையாட்டுத்துறை அமைச்சராக வந்து இருக்கிறேன். ஆனால், முதல்முறையாகத் துணை முதலமைச்சர் என்ற பொறுப்பை ஏற்று, உங்களையெல்லாம் பார்த்து, உங்களின் வாழ்த்துகளை வாங்க வந்து இருக்கிறேன்.

### கழகத் தலைவர் உத்தரவு!

அதில் கூடுதல் சிறப்பு என்னவென்றால், முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு, கழகத் தலைவர் அவர்கள், தமிழ்நாட்டில் உள்ள அனைத்துத் தொகுதிகளிலும் கலைஞரின் சிலையை நிறுவ வேண்டும் என்று. நமக்கு உத்தரவிட்டார். அதன்படி இன்றைக்கு இந்தத் துறையூர் சட்டமன்றத்தில் நம் முத்தமிழறிஞர் கலைஞரின் சிலையைத் திறக்கின்ற வாய்ப்பை எனக்குக் கொடுத்த அமைச்சர் அண்ணன் நேரு அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு, இளைஞர் அணிக்குத் தலைவர் அவர்கள் மேலும் ஒரு பொறுப்பைக் கொடுத்தார். அனைத்துச் சட்டமன்ற தொகுதிகளிலும் ஒரு 'கலைஞர் நூலகம்' திறக்க வேண்டும் என்று சொன்னார். அதன்படி நூலகத்தைத் திறந்து வைத்துவிட்டு, உங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் சகோதரர் அருண் நேரு அவர்களின் நாடாளுமன்ற அலுவலகத்தையும் திறந்து வைத்துவிட்டு, இங்கு வந்து இருக்கிறேன்.

### அண்ணாவின் சிலை அருகே

இன்றைக்கு இன்னும் கூடுதல் சிறப்பு என்னவென்றால் பேரறிஞர் அண்ணாவின் சிலை அருகே, கலைஞரின் சிலையை வைத்ததற்குப் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு கலைஞரின் சிலையை, தமிழ்நாடு முழுக்கத் திறக்கிறோம். பல்வேறு திட்டங்களை கலைஞரின் பெயரில் அறிவிக்கிறோம். `கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்', `கலைஞர் பன்னோக்கு மருத்துவமனை', `கலைஞர் நூலகம்', 'கலைஞர் விளையாட்டு அரங்கம்' இப்படி எத்தனையோ திட்டங்களை நாம் துவக்கி வைக்கிறோம். ஒவ்வொரு சட்டமன்றத்திலும் கலைஞரின் சிலையைத் திறக்கிறோம் என்றால், கலைஞரின் கொள்கைகளை, கலைஞரின் லட்சியங்களை மக்களிடம் கொண்டுபோய்ச் சேர்க்கிறோம் என்று அர்த்தம்.

நம் எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் ஒரு நான்கு மாதங்களுக்கு முன்பு, ஒரு பொதுக்கூட்டத்தில் பேசினார். எதற்கெடுத்தாலும் கலைஞர் பெயரை வைக்கிறீர்கள். வேறு பெயரே கிடைக்கவில்லையா என்று. நல்ல, நல்ல திட்டங்களுக்குக் கலைஞர் பெயரை வைக்காமல், கரப்பான்பூச்சி பெயரையா வைக்க முடியும். கரப்பான் பூச்சி என்று யாரை சொல்கிறேன் என்று உங்களுக்குத் தெரியும்.

தி.மு.க. காரனுக்குத் தெரியவில்லை என்றால், வேறு யாருக்கும் தெரியாது. அவர் தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருக்கிறார். உதயநிதிக்கு எதற்குத் துணை முதலமைச்சர் பொறுப்பு கொடுக்கிறீர்கள். அவருக்கு என்ன தகுதி இருக்கு. அவருக்குத் தகுதியே கிடையாது என்று சொல்கிறார். ஆமாம், நான் ஒத்துக்கொள்கிறேன். எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமிக்கு இருக்கின்ற தகுதி நிச்சயமாக எனக்குக் கிடையாது.

ஏனென்றால், நான் கூவத்தூருக்கு சென்று, டேபிள் சேருக்குள் புகுந்து போய் யார் காலையும் பிடித்து அந்தப் பொறுப்புக்கு வரவில்லை.

### உங்கள் வீட்டுப்பிள்ளை

நான் இன்னும் சொல்கிறேன். எவ்வளவு பெரிய பொறுப்புக்கு வந்தாலும், இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர், விளையாட்டுத்துறை அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர் இப்படி எத்தனையோ பொறுப்புகளில் இருந்தாலும் அதையெல்லாம் விட அதிகமாக எண்ணுவது எப்போதுமே உங்கள் வீட்டுப்பிள்ளையாக, பொறுப்பான பிள்ளையாக, கலைஞரின் பேரனாக இருப்பேன். அதைத்தான் நான் பெருமையாக எண்ணுவேன்.

இந்தச் சிறப்பான நேரத்தில் வாய்ப்பை அளித்த நேரு அண்ணன் அவர்களுக்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்து, நம் தலைவர் அவர்கள் ஏற்கனவே சொல்லி இருக்கிறார். வருகின்ற 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் இன்னும் சரியாகப் பார்த்தீர்கள் என்றால் இன்னும் 15 மாதங்கள்தான் இருக்கின்றன, நம் கையில். நம் தேர்தல் பணிகளைப் பிரச்சாரத்தை ஆரம்பிக்க வேண்டும்.

எப்படி நாடாளுமன்றத் தேர்தலில் 100 சதவிகித வெற்றியை தமிழ்நாட்டு மக்கள் நமக்குக் கொடுத்தார்கள். நம் தலைவரின் திராவிட மாடல் ஆட்சிக்கு ஒரு சான்றிதழாக 40க்கு 40 தொகுதி வெற்றிப் பெற்றோம். அதேபோல் வர இருக்கின்ற சட்டமன்ற தேர்தலிலும், தலைவர் சொல்லி இருக்கிறார் 234 தொகுதிகளில் குறைந்தது 200 தொகுதிகளிலாவது தி.மு.க கூட்டணி, நம் வெற்றிக் கூட்டணி வெற்றிப்பெற வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்.

இரண்டு நாட்களுக்கு முன்புகூட அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளர் திண்டுக்கல் சீனிவாசன் பொதுக்கூட்டத்திலேயே பேசுகிறார். `அ.தி.மு.க கூட்டணிக்கு வாருங்கள்' என்றால் `ஒருத்தன் 100 கோடி கேட்கிறான், ஒருவன் 20 தொகுதி கேட்கிறான்' என்கிறார். இந்த மாதிரி ஒரு கேவலமான, அவலமான நிலை எந்தக் கட்சிக்காவது வந்து இருக்கிறதா? ஆனால், நம் வெற்றிக்கூட்டணி, திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கடந்த 7 தேர்தல்களில் தொடர் வெற்றியைப் பெற்று வருகிறது.

### 100 சதவிகித வெற்றி

நம் தலைவர் எப்போது தி.மு.கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்றாரோ அதன்பிறகு சந்தித்த அனைத்து தேர்தல்களிலும் 100 சதவிகித வெற்றியை பெற்று இருக்கிறது, நம் திராவிட முன்னேற்றக் கழகம். எனவே, வருகின்ற சட்டமன்ற தேர்தலும் நமக்கு மிகமிக முக்கியம். தலைவர் சொன்னதைபோல் குறைந்தது 200 தொகுதிகள் வெற்றி பெற வேண்டும் என்றால், தொடர்ந்து இன்றிலிருந்து கழகத் திட்டங்களின் பிரச்சாரத்தை உடன்பிறப்புகள் நீங்கள் ஒவ்வொருவரும் மக்களிடம் எடுத்துக் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும்.

தேர்தலில் வெற்றி பெற்று 2026ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சியமைக்கப் போவது திராவிட முன்னேற்றக் கழகம் தான், முதலமைச்சர் நம் தலைவர் அவர்கள்தான் என்ற உறுதிமொழியை இன்று கலைஞரின் சிலை முன்பு, பேரறிஞர் அண்ணாவின் சிலை முன்பு நாம் அத்தனைபேரும் உறுதி எடுத்துக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, உங்கள் அனைவருக்கும் மீண்டும் 2026ஆம் ஆண்டுத் தேர்தலை ஞாபகபடுத்திப் பிரச்சாரத்தை இன்றிலிருந்து ஆரம்பியுங்கள்.

நன்றி, வணக்கம்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்வில் அமைச்சர்கள் கே.என். நேரு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, எஸ்.ரகுபதி, எஸ்.எஸ்.சிவசங்கர், கோவி.செழியன், சிவ.வீ.மெய்யநாதன், மாவட்டக்கழகச் செயலாளர்கள் காடுவெட்டி தியாகராஜன், வைரமணி, செல்லபாண்டியன், பெரம்பலூர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஜெகதீசன், நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு, திருச்சி மேற்கு மாநகரச் செயலாளர், மேயர் அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்தரபாண்டியன், ஸ்டாலின்குமார், கதிரவன், பழனியாண்டி, பிரபாகரன், குளித்தலை மாணிக்கம், அப்துல் வகாப், அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் தர்மன் இராஜேந்திரன், மாவட்ட அவைத்தலைவர் அம்பிகாபதி, மாவட்டத் துணைச் செயலாளர்கள் மதிவாணன், பானுமதி கண்ணன், கனகராஜ், செயற்குழு உறுப்பினர்கள் தமிழ்மாறன், கருணை ராஜா, கழக இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர் ஆனந்த்குமார், மாநில நெசவாளர் அணி துணைச் செயலாளர் கோவிந்தன், துறையூர் நகரக் கழகச் செயலாளர் முரளி, ஒன்றியக் கழகச் செயலாளர் அண்ணாதுரை, சரவணன், வீரபுத்திரன், முத்துசெல்வம், அசோக், பேரூர் கழகச் செயலாளர்கள் வெள்ளையன், நடராஜன், திருச்சி மத்திய மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆனந்த், வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கார்த்திக், வடக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சிலம்பரசன், முத்துத்துரை, கலையரசன், மருதுசேகர், ராஜேஷ், சிவ நடராஜன் மற்றும் கழக முன்னணியினர் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.